# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க,

# சுங்கம் (திருத்தச்) சட்டம்

---

*[1991 யூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1991 யூன் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

1991 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம்

[1991, யூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ 89/90
3017

**சுங்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, சுங்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— — 235 ஆம் அத்தியாயத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"குடியரசின் வெளிநாட்டு நாணயப் பெறுமதிகளை மாற்றுதல்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதிகளை இலங்கைக் குடியரசின் நாணயப் பெறுமதிகளுக்கு மாற்றுதல் எந்தப் பண்டங்கள் மீது தீர்வை செலுத்தப்படற்பாலதாகுமோ அப் பண்டங்கள் தொடர்பிலான மதிப்பீட்டுப் பட்டியல் முன்வைக்கப்பட்ட தேதியன்று இருந்தவாறாக பணிப்பாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டுக் கசெற்றில் வெளியிடப்பட்ட அத்தகைய நாணய மாற்று வீதங்களுக்கு இணங்கச் செய்யப்படல் வேண்டும்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை அதன் (3) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2) இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டது தவிர, இப்பிரிவானது, இறக்குமதி செய்யப்பட்டதன் பின்னர் பயன்படுத்தப்பட்ட பண்டங்களுக்கு ஏற்புடைத்தாதலாகாது.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவானது "இரண்டாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு இலட்சம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவானது, "ஏலம் மூலம் விற்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒன்றில் ஏலம் மூலம் அல்லது கேள்வி மூலம் விற்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 109 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 127இ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

6. பின்வரும் புதிய பிரிவானது, 127ஆ ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 127 இ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

"பிணையில் விடுவிப்பதற்கான தத்துவம் மேல் நீதிமன்றத்தில் உரித்தாக்கப்படல் வேண்டுமென்பது.

127இ. எப்பண்டங்களின் பெறுமதியானது பத்து இலட்சம் ரூபாவினை விஞ்சுகின்றதோ அவ் ஏதேனும் பண்டங்கள் தொடர்பில் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றிற்காகச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் ஆளெவரும், மேல் நீதிமன்றத்திலான விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தவிர பிணையில் விடுவிக்கப்படுதல் ஆகாது. இப்பிரிவினால் மேல்நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவமானது, குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்த வலயத்தில் வதிகின்றாரோ அந்த வலயத்துக்குள் நடாத்தப்படும் மேல்நீதிமன்றத்தின் நீதிபதியினால் அல்லது தவறானது, எந்த வலயத்துக்குள்ளாகப் புரியப்பட்டிருப்பதாகக் காட்டப்பட்டுள்ளதோ அந்த வலயத்துக்குள் நடாத்தப்படும் மேல் நீதிமன்றத்தின் நீதிபதியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 145 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 145 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவானது இடப்படுகின்றது:—

"தண்டங்களை அறவிடுதல்.

145. (1) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் பணத் தொகையில் உறப்படும் ஒவ்வொரு தண்டமும் அத்தகைய தண்டம் அல்லது பறிமுதல் உறப்பட்ட தேதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்படும் தேதிவரை இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வட்டி வீதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உறப்பட்ட எல்லாத் தண்டங்களும் பறிமுதல்களும் அவற்றின் மீதான ஏதேனும் வட்டியும் அத்தகைய தண்டத்திற்கு அல்லது பறிமுதலுக்கு ஆளாகின்ற நிறத்தவர் எந்த மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைகளுக்குள் வதிகின்றாரோ அந்த மாவட்ட நீதிமன்றத்தில், சட்டத்துறைத் தலைமையதிபதியின் பெயரில் தொடுக்கப்படும் வழக்கொன்றின் மூலம் வழக்குத் தொடரப்பட்டு அறவிடப்படலாம். 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3, 4, 5, 6, 7, 8, 12, 13, 14, 15 அ அத்துடன் 23 ஆகிய பிரிவுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய ஒவ்வொரு வழக்கைத் தொடுப்பதற்கும் விசாரிப்பதற்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் மாவட்ட நீதி மன்றமொன்றில் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ள விடத்து, நீதிமன்றமானது அத்தகைய வேறு அது வலை முன்னதாகவோ கையுதிர்ப்பது, அவசியமான தான சந்தர்ப்பங்கள் தேவைப்படுத்தினுல் தவிர, அத் தகைய வழக்கை விசாரித்து முடிவு செய்வதற்கு முன் னுரிமை கொடுத்தல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 154 ஆம் பிரிவானது, அப்பிரிவின் 2 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத் தின் 154 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) எவையேனும் கப்பல்கள், வள்ளங்கள், பண்டங்கள் அல்லது வேறு பொருட்கள் தொடர்பாக தகுந்த நீதிமன்றத்திஞல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்ததன் பின்னர் நீதிமன்றமானது, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியின் விண்ணப்பத்தின் மீதும் கோரிக்கை யாளர்கள் அவ்வாறு செய்வதற்கு மறுப்புத் தெரிவிக்காதவிட்டாலும், அத்தகைய கப்பல்கள், வள்ளங்கள், பண்டங்களை அல்லது வேறு பொருட்களைக் கையுதிர்த்து, விற்பனை வரும்படிகளை நீதிமன்றத்தில் வைப்பிலிடுமாறு அத்தகைய பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அதிகார மளிக்கலாம். அத்தகைய கப்பல்கள், வள்ளங்கள் அல்லது வேறு பொருட்களைக் கையுதிர்ப்பதற்குக் கோரிக்கையாளர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றவிடத்து அத்தகைய கப்பல்களின் வள்ளங்களின் பண்டங் களின் அல்லது வேறு பொருட்களின் (அத்தகைய பணிப்பாளர் தலை மையதிபதியினுல் மதிப்பிடப்பட்டவாறுன) சந்தைப் பெறுமதிக்குச் சமனுன காசுப் பிணைப்பொறுப்பை நீதிமன்றத்தில் வைப்பிலிடுமாறு நீதிமன்றமானது கோரிக்கையாளரைத் தேவைப்படுத்தலாம்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவானது இத்தால் நீக் கஞ் செய்யப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத் தின் 160 ஆம் பிரிவை நீக்குதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நூறு ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பத்தாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத் தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத் தின் 166 ஆம் பிரிவைத் திருத்துதல்.

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.